1984 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்குக் காரணம் என்னவென்றால், ஆந்திர மாநிலத்திலே இருந்து சில தகவல்கள் கிடைக்க வேண்டும். அவர்களைத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகிறது.

'In his letter dated 11th January 1984, addressed to the Registrar, Tamil Nadu Homeopathy Council. The Deputy Inspector General of Police (C.I.D. Crimes) has reported that the above petition was enquired into by the Hyderabad Crime staff, and that enquiry has revealed that as some of the Tamil Nadu Homeopathy Medical Council Practitioners were denied key posts, the petition was sent against the Christian Missionary, Punganoor, levelling false allegations.'

என்ற தகவல் அங்கேயிருந்து அவர்களுக்கு சாதகமாக வந்திருக்கிறது. சில பேர்களுக்கு இடம் கிடைக்கவில்லை, அதனால் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள் என்று ஹைதராபாத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆகவே, இதிலே காலதாமதம் ஏற்படவில்லை நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும், பல்வேறு இலாக்காக்களைப் பொறுத்தவரையிலும் உள்ளபடியே சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டுபிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் திட்டம்.

516—(*வினா எண் 18362) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டு பிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டுபிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் திட்டம் ஏதும் இத்துறையில் தற்சமயம் இல்லை.

(ஆ) எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இப்படிப்பட்ட முகாம்கள் நடத்துவதற்கு உத்தேசமில்லை என்று சொன்னார்கள், ஆனால் பல கிராமங்களில் பலபேர்கள் சிறு வயதில் கூட இந்தச் சர்க்கரை வியாதியால் பாதிக்கப் பட்டிருப்பதால் நாம் எப்படி கண் சிகிச்சை முகாம்கள் நடத்தினோமோ அதேபோல் இந்தச் சர்க்கரை வியாதியைப் பொறுத்தும் அப்படிப்பட்ட முகாம்கள் நடத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே இது மக்களுக்கு நன்றாகப் புரிய வேண்டும் என்பதற்காக நம்முடைய இலாகாவில் பணி புரிகிற டாக்டர் ஏ. சுந்தரம், எம். டி. அவர்கள் நீரிழிவு நோய் காலம் என தமிழில் ஒரு புத்தகம் போட்டு எல்லோருக்கும் புரியக்கூடிய அளவில் ஒரு நூலை தயார் செய்திருக்கிறார்கள். இப்போது நாம் என்ன செய்கிறோம் என்றால் அதிலிருந்து சில பகுதிகளை எடுத்து Health Education Information on Diabetes சர்க்கரை வியாதியை பொறுத்த வரையில் மக்கள் என்னென்ன தெரிந்து கொள்ள வேண்டும், என்பதையெல்லாம், எப்படிப்பட்ட உணவு அருந்த வேண்டும், எந்த உடற்பயிற்சி செய்ய வேண்டும், எப்படி அந்த வியாதி வருகிறது, தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது என்பது பற்றி டயபடிக் எட்யூக்கேஷன் என்று ப்ரோச்சர்ஸ் அச்சடித்து பாம்பலட்ஸ் போல் தயார் செய்து ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். எல்லா மருத்துவமனைகளிலும் அதற்காக ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். இன்னொன்றையும் தமிழக சர்க்கார் செய்திருக்கிறது. எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு வேலையைச் செய்திருக்கிறோம். டயபட்டிக்ஸ்-க்கு போஸ்ட் க்ராஜுவேட் கோர்ஸ் கிடையாது. எம். டி. (டி) கொண்டுவர வேண்டும் என்று நாம் மெடிக்கல் கவுன்சிலுக்கு எழுதியிருக்கிறோம் இந்த ஆண்டு எம். டி. (டயாபெட்டாலஜி) என்ற போஸ்ட் க்ராஜுவேட் படிப்புகூட வர வாய்ப்பிருக்கிறது. இந்த வகையில் இந்த டயபட்டிஸ் நோய்க்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லா வகைளிலும் ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறோம். பயிற்சி முகாம்தான் தேவை இல்லை என்று சொன்னேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் சென்டரிலும் பாம்பலட்ஸ் போட்டுக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுத்தாலும்கூட கிராமங்களில் உள்ள மக்கள் இதைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. இந்த நோயைக் கட்டுப்படுத்த, இது எதனால் வருகிறது என்று—இது ஹெரிடிட்டரி என்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த வாய்ப்பிருக்கிறது

1984 மார்ச் 30]

என்று -நாம் பயிற்சி முகாம்கள் நடத்தவில்லையென்றாலும் —ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளில் இதைப்பற்றி மக்களுக்குச் சொல்லக்கூடிய, Oral-ஆக சொல்லக்கூடிய வாய்ப்புகளை உண்டாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. இந்த யோசனையை தான் ஏற்றுக்கொண்டு அதற்காக வேண்டிய, தேவைப்படுகிற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இது செயல்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இங்கே வாக்குறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவர் அவர்களே, சர்க்கரை வியாதியைக் கண்டுபிடிக்க, கிராமப்புறங்களில் உள்ள நடமாடும் ஆஸ்பத்திரிகளில் கண்டுபிடிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது நடமாடும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு மொபைல் ஹெல்த் சென்டர், 415 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 260 இடங்களில் மொபைல் ஹெல்த் சென்டர்ஸ் ஆரம்பித்திருக்கிறோம். அங்கு யூரின் டெஸ்ட் செய்து சர்க்கரை வியாதி இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிறார்கள். இன்னொன்றையும் நாம் செய்திருக்கிறோம். தாலுகா மருத்துவமனைகளில் உடனடியாக ப்ளட் டெஸ்ட் செய்து ப்ளட் ஷுகர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கக்கூடிய விதத்தில் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். எல்லா தாலுகா மருத்துவ மனைகளிலும் ப்ளட் டெஸ்ட் செய்வதன் மூலம் ப்ளட் ஷுகர் இருக்கிறதா, எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறோம்.

மதுரைப் புறநகர்ப் பகுதியில் மருத்துவமனை அல்லது மருந்தகம் அமைக்கும் திட்டம்

517 —(*வினா எண். 19741) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரைப் புறநகர்ப் பகுதிகளில் மருத்துவமனை அல்லது டிஸ்பென்ஸரி அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே : இல்லை.